# பாடம் 17 எகிப்திலே யாக்கோபு (ஆதி 46-50)

எல்லாக் கலாச்சாரத்தைச் சார்ந்த மக்களும் பரிசுகள் கொடுப்பதை விரும்புகின்றனர். பரிசுகள் மூலம் அன்பையும், மரியாதையையும் பிறருக்கு காண்பிக்கலாம். அந்த பரிசு நீண்ட காலம் தங்காவிட்டாலும், அது அறிவிக்கும் செய்தி பல காலம் நீடிக்கும். பார்வோன் ராஜாவும், யாக்கோபுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் கற்பனைக்கு அப்பாற்பட்ட ஓர் பரிசை அளித்தான்.

யோசேப்பின் குடும்பத்தைப் பற்றி அறிந்தவுடன் பார்வோன் பின்வரும் செய்தியை அனுப்பினான். “உன் சகோதரர்களை கானானுக்கு அனுப்பி, உன் தந்தையையும் அவர்கள் குடும்பங்களையும் இங்கே அழைத்து வரச் சொல். அவர்கள் வசதியாக பயணம் செய்யும் பொருட்டு எகிப்திலிருந்து வாகனங்களை எடுத்துக் கொண்டு செல்ல சொல். அவர்களின் உடைமைகளை இங்கேயே வைத்துச் செல். ஏனெனில் எகிப்தின் மிகச் சிறந்த பாகத்தை உங்களுக்கு தருவேன்” என்றான்.

இவ்வாறு பரிசாய் அளித்த அந்த நிலமே அடுத்த 400 வருஷங்களுக்கு அவர்களின் வீடாய் இருந்தது. யோசேப்பு தன் சகோதரர்கள் அனைவருக்கும் புதிய மாற்று வஸ்திரங்களை பரிசாய் அளித்தான். பென்யமீனுக்கோ புதிய மாற்று வஸ்திரங்களையும் 300 வெள்ளிக்காசையும் பரிசாய் அளித்தான். 20 கழுதைகளில் தன் தகப்பனுக்கு வெகுமதிகளும், தன் சகோதரர்களின் பயணத்திற்கு வேண்டியப் பொருள்களையும் அனுப்பி வைத்தான்.

யோசேப்பின் சகோதரர்கள் கானான் தேசத்திலுள்ள தங்கள் வீட்டிற்கு திரும்பி சென்ற பின் என்ன சம்பாஷித்து இருப்பார்கள் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவர்கள் யாக்கோபிடம் “தந்தையே எகிப்தின் தலைவன் யார் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. அது உங்கள் காணாமல் போன மகன் என்று சொன்னால் நம்புவீர்களா? யோசேப்பு இன்னும் உயிரோடே இருக்கிறான். இது உண்மை!” என்றார்கள்.

அவர்கள் கூறியதை எல்லாம் கேட்டதும் யாக்கோபு பிரமித்து போனான். முதலில் யோசேப்பு உயிரோடு இருக்கிறான் என்பதை அவனால் நம்ப முடியவில்லை என்றாலும், பின்பு எல்லாவற்றையும் அவன் நம்பி யோசேப்பு அவனுக்கு அனுப்பிய எல்லா வெகுமதிகளையும் பார்த்ததும் உற்சாகமானான்.

ஆகையால் யாக்கோபு தன்னுடைய குடும்பத்தினரோடு 60 க்கும் மேலான நேரடி தலைமுறையினரோடும் தன் குமாரர்களின் மனைவிகளோடும் எகிப்திற்கு புறப்பட்டான். ஆபிரகாமும் ஈசாக்கும் தேவனை துதித்த பெயர்செபாவில் யாக்கோபும் பலியிட்டு தேவனை தொழுது கொண்டான். அன்று இரவு தேவன் யாக்கோபுக்கு தரிசனமாகி, "நான் உன் தேவன். நான் உன் தகப்பனுடைய தேவன். நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்பட வேண்டாம். அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். குறித்த சமயத்திலே மறுபடியாக உன் சந்ததியை கானான் தேசத்திற்கு கொண்டு வருவேன்" என்றார்.

எகிப்திலே பஞ்சம் மிகவும் கொடியதாய் இருந்தது. எகிப்தியர் தங்கள் பணத்தையெல்லாம் தானியங்கள் வாங்கச் செலவிட்டனர். பட்டினியாயிருக்காமல் வாழ்வதற்காக, எகிப்தியர்கள் முதலில் தங்கள் ஆடுமாடுகளையும் பின்பு தங்கள் நிலங்களையும் கடைசியாக தங்களையும் அடிமைகளாக விற்று தானியங்களை வாங்கினார்கள்.

இந்த நேரத்தில் இஸ்ரவேலின் பிள்ளைகளுக்கு மிகுதியான உணவு இருந்தது. அவர்கள் சொத்துகளை மிகுதியாய் வாங்கி அதிகமாய் பலுகிப் பெருகினார்கள். யோசேப்பின் உயர்ந்த பதவியினிமித்தம் பார்வோன் யாக்கோபிற்கு எல்லா உதவிகளையும் செய்து கொடுத்தான். அவர்கள் குடும்பங்களுக்கும் ஆடுமாடுகளும் வாழ்வதற்கு கோசேன் நாட்டை கொடுத்தான். கோசேன், நைல் ஆற்றின் மிகவும் செழிப்பான தென்கிழக்குப் பகுதியில் இருந்தது.

யாக்கோபு 17 ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்த பிறகு தன் மரணம் சமீபித்ததை அறிந்தான். அவன் யோசேப்பை வரவழைத்து "என்னை எகிப்தில் அடக்கம் பண்ணாமல் கானான் தேசத்தில் அடக்கம் பண்ணுவேன் என்று ஆணையிட்டுக்கொடு" என்றுக் கேட்டுக் கொண்டான். அவன் கேட்டுக் கொண்டபடி கானான் தேசத்திலே அடக்கம் பண்ண யோசேப்பு ஒத்துக் கொண்டான்.

அவன் மிகவும் நோயுற்றப் பொழுது யோசேப்பை அழைத்து, “என்னுடைய குமாரர் ரூபன், சிமியோன் போல உன் இரண்டு குமாரருமான எப்பீராயீமும், மனாசேயும் என்னுடையவர்களே. அவர்களும் என்னுடைய சுதந்திரத்தில் ஒரு பாகத்தைப் பெற்று இஸ்ரவேலின் குமாரர்களாய் கருதப்படுவார்கள். உன் முகத்தை காண்பேன் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இதோ, உன் பிள்ளைகளையும் காண தேவன் எனக்கு அருள் செய்தார்” என்று சொல்லி அவர்களை முத்தமிட்டு அணைத்துக் கொண்டான்.

அப்பொழுது தன் தந்தையின் முழங்கால்களுக்கு நடுவே இருந்த பிள்ளைகளை யோசேப்பு பின்னிடப்பண்ணி அவருடைய முகத்துக்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான். பின்பு எப்பிராயீமைத் யாக்கோபின் இடது கைக்கு நேராகவும், மனாசேயை யாக்கோபின் வலது கைக்கு நேராகவும் நிறுத்தினான். யாக்கோபு தன் கைகளை மாற்றி தன் வலது கையை எப்ராயீமின் தலையின் மீது வைத்தான். யோசேப்பு தன் தந்தையின் கையை எடுத்து “மனாசேதான் மூத்தவன் அவன் தலையின் மேல் உம்முடைய வலது கையை வைக்க வேண்டும்” என்றான்.

அதற்கு யாக்கோபு “மகனே நான் என்ன செய்கிறேன் என்று தெரிந்தே செய்கிறேன். இவனும் பெருகுவான், இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்” என்றான். இவ்வாறு எப்பிராயீமை, மனாசேக்கு முன்னே வைத்து ஆசீர்வதித்தான். யாக்கோபு தன் குமாரர்கள் அனைவரையும் அழைத்து ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் ஆசீர்வாதம் கூறினான். அவன் யுதா, ஓர் ராஜ குலமாவான் என்றும், தேவனுடைய வாக்குத்தத்தம் அவன் தலைமுறையிலிருந்தே வரும் என்றும் ஆசீர்வதித்தான்.

யாக்கோபு இறந்தவுடன், யோசேப்பும் அனைத்து எகிப்தியரும் துக்கங்கொண்டாடினார்கள். யோசேப்பு தன் தகப்பனுக்கு ஆணையிட்டு கொடுத்தபடி கானானில் அவனை அடக்க செய்ய பார்வோனின் அனுமதியைப் பெற்றான். அவனும் அவன் சகோதரர்களும், அவன் குடும்பத்தினரும் பார்வோனின் அரண்மனையிலிருந்த பெரியவர்களாகிய

அவனுடைய சகல உத்தியோகஸ்தரும் எகிப்துதேசப் பெரியோரும் இரதங்கள் மற்றும் குதிரைவீரருடன் சென்றனர்.

கானான் தேசத்தில், ஆபிரகாம், மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்திலே தனக்கு சொந்தக் கல்லறையாக வாங்கின நிலத்திலுள்ள குகையில் யாக்கோபை அடக்கம் பண்ணினான். அங்கேதான், ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள் மற்றும் லேயாளும் அடக்கம் பண்ணப்பட்டிருந்தனர்.

எகிப்துக்கு திரும்பியவுடன் யோசேப்பின் சகோதரர்கள், ''நம் தந்தை உயிரோடிருந்ததால்தான் யோசேப்பு நம்மிடம் அன்பு கூறினான். ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்கு சரிக்குச் சரிக்கட்டுவான்'' என்று சொல்லி யோசேப்பினிடம் ஆள் அனுப்பி "உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவு செய்து மன்னிக்க வேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னமே உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார். ஆகையால் உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்க வேண்டும்'' என்று அவனுக்குச் சொல்லச் சொன்னார்கள்.

அவர்கள் அதை யோசேப்புக்கு சொன்ன போது அவன் அழுதான். பின்பு, அவனுடைய சகோதரரும் போய் அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து "இதோ நாங்கள் உமக்கு அடிமைகள்'' என்றார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி "பயப்படாதிருங்கள் நான் தேவனா? நீங்கள் எனக்கு தீமைச் செய்ய நினைத்தீர்கள். தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால் பயப்படாதிருங்கள். நான் உங்களையும் குழந்தைகளையும் பராமரிப்பேன்'' என்றான்.

பின்பு யோசேப்பு 110 வருஷங்கள் உயிரோடிருந்து எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகளையும் கண்டான். யோசேப்பு தன் சகோதரர்களை நோக்கி "தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப் பண்ணுவார். அப்பொழுது என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே அடக்கம் பண்ணுவீர்கள் என்று ஆணையிட்டுக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

இந்தப்பாடம் மிகவும் முக்கியமானது ஏனெனில் தேவனுடைய நோக்கம் தேசத்திலுள்ளவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்பதே. அவர் யோசேப்பை எகிப்துக்கு நடத்தியது யோசேப்பின் சொந்த ஜனங்களை மட்டுமல்ல மற்ற எகிப்தியர்களையும், பஞ்சத்திலிருந்து காப்பாற்றவே. தேவன் தமது பிள்ளைகளைப் பிறருக்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த விரும்புகிறார்.

இந்த செயல்முறையில் கிறிஸ்தவர்கள் தம்மை காயப்படுத்துபவர்களை மனப்பூர்வமாய் மன்னிக்க கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தமது பூரணமான திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நம்ப வேண்டும். அவர் முடிவை தொடக்கத்திலிருந்தே அறிந்திருக்கிறப்படியால் அவர் நம் அனைவருக்கும் ஓர் நோக்கம் வைத்துள்ளார் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

இந்த பாடத்தின் முக்கிய சத்தியம் என்னவென்றால் தம் பிள்ளைகளின் தேவைகளை தேவன் அவர்கள் கற்பனை செய்தும் பார்க்க முடியாத வகையில் சந்திப்பார். அதற்கு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும். ஏனெனில் அவர் சரித்திரத்தையே தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்

1. யாக்கோபின் குடும்பத்தினருக்கு பார்வோன் அளித்த வாக்குத்தத்தம் என்ன? (6 நொடிகள் நிற்க)

'பார்வோன் அவர்களுக்கு எகிப்தின் மிகச் சிறந்தப் பகுதியை கொடுத்தான்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. யாக்கோபு எகிப்துக்குப் போகும் வழியில் தேவனிடத்திலிருந்து என்ன வாக்குத்தத்தைப் பெற்றார்? (6 நொடிகள் நிற்க)

    தேவன் 'குறித்த நேரத்திலே நான் உன் சந்ததிகளை இந்தத் தேசத்திற்குத் திரும்ப வரப்பண்ணுவேன்' என கூறினார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் தந்தை இறந்ததும் ஏன் பயந்தனர்? (6 நொடிகள் நிற்க)

    'யாக்கோபு மரணமடைந்ததால், யோசேப்பு நாம் செய்த தீங்கிற்குச் சரிக்குச் சரிக்கட்டுவான்' என்று நினைத்து பயந்தனர் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. தான் மரிக்கும் முன் யோசேப்பின் கடைசி வேண்டு கோள் என்ன? (6 நொடிகள் நிற்க)

    'தேவன் உங்களைக் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும் போது என் எலும்புகளை அந்தத் தேசத்திற்குக் கொண்டுச் செல்லுங்கள்' என கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை முதல் மூன்று பகுதிகளைக் கேட்டிருந்த நபரிடமே பகிர்ந்து கொள்ளவும். பின்னர் இந்தப் பாடத்தின் முக்கியக் கருத்து என்ன? என்று கேளுங்கள். அது தேவன் தம் பிள்ளைகளின் தேவையை எவ்வாறு சந்திக்கிறார் என்பதாக இருக்கலாம். நம் எதிரிகளை நேசிப்பது, நம் குடும்பத்தில் உள்ள நபர்கள் எதிரிகள் ஆகும் போது அவர்களை மன்னிப்பது, என்ற பல பதில்களை நீங்கள் கூறலாம். உங்கள் நண்பர் கொடுக்கும் பதிலை கேட்டு அவருடன் கலந்துரையாடல் செய்யவும்.

பாடம் முடிந்தது